பக்கங்கள்: 10

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 ஐப்பசி 15 வெள்ளிக்கிழமை 01.112024 கதிர் 359



## ஜனநாயகச் சட்டையை போட்டாலும் ஜேவிபிக்கு அது ஏற்றதாயில்லை

### ரணில் விக்கிரமசிங்க சாடல்

ஜேவிபிஜனநாயகத்தின்உடையை அணிந்திருந்தாலும் இன்னும் அது அதனது உடம்புக்கு ஏற்றதாகத் தெரியவில்லை என முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கண்டியில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் தெரிவித்தார்.

அழுக்கான ஆடைகளை தூக்கி எறிந்துவிட்டு ஜனநாயகத்தின் ஆடைகளை அணியுங்கள்எனஜனாதிபதிஊடகங்களுக்கு கூறியுள்ளார் என்று தெரிவித்த ரணில் விக்கிரமசிங்க, பத்தரமுல்லை சீலரதன தேரருக்கு புரிகின்ற விடயங்கள்கூட நாட்டின் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அமைச்சருக்குப் புரியவில்லை எனவும் தெரிவித்துள்ளார். .

புதியஜனநாயகமுன்னணியின்கீழ்கேஸ் சிலிண்டரில் போட்டியிடும் கண்டி மாவட்ட வேட்பாளர்களின்வெற்றியைஉறுதிப்படுத்தும் வகையில் கண்டியில் இந்த மக்கள் ☞ 2

## இனி இது ரகசியம் அல்ல!

தொடருந்து நிலைய அதிபர்கள் புதன்கிழமை பிற்பகலில் இருந்து வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். தமது தொழிற்சங்க நடவடிக்கையாக பயணிகளுக்கான பயணச் சீட்டுக்களை விநியோகிப்பதில்லை என்றுஅவர்கள்முடிவெடுத்திருந்தனர். தொடருந்துதிணைக்களத்தின்ஏனைய பணியாளர்கள் வேலை செய்வதால் தொடருந்துகள் தடை இன்றி இயக்கப்படுகின்றன. தொடருந்து நிலையங்களில்பயணச்சீட்டுக்களை வழங்குவதற்குமாற்றுஏற்பாடுஇல்லை என்றால் பயணிகள் இலவசமாக பயணிக்கலாம் என்பதுதான் இப்போதைக்குள்ள நிலமை.

இந்தப் போராட்டத்திற்கு மத்தியில் நேற்று திடீரென்று யாழ்ப்பாணத்திற்கான ஏசி தொடருந்தை இயக்கி இருக்கிறார்கள். அதனால் பெருமளவு நட்டம் ஏற்பட்டிருக்கின்றதாம். ☞ 2

## சிங்கள தேசியவாதத்தோடு செயற்படுகின்றது ஜேவிபி

### அடைக்கலநாதன் குற்றச்சாட்டு

இடதுசாரிஅரசியலைஅடித்தளமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட ஜேவிபி இன்று சிங்கள தேசியவாதத்தோடு இணைந்தே செயற்படுகின்றது. இருந்தாலும்தமிழ்தரப்பைபுறந்தள்ளி அதனால் இம்முறை ஆளும் தரப்பை அமைக்க முடியாது ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் வன்னி மாவட்ட வேட்பாளர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார். ☞ 8

### நாடாளுமன்ற தேர்தலின் பின்

## தனது தொழிற்சங்கங்களை கலைக்கின்றது ஜேவிபி?

நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் இந்த நாட்டில் வேலைநிறுத்தங்களின்விரும்பத்தகாதஅனுபவம்முடிவுக்கு வரும் என தேசிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற வேட்பாளர் லக்ஷ்மன் நிபுணராச்சி ☞ 8

### கடத்தல் கார் வழக்கில்

## கைதான லொஹானுக்கு நவம்பர் 7 வரை மறியல்

இலங்கைக்குள் உதிரிப் பாகங்களாகக் கடத்தி வரப்பட்டுப் பின்னர் பொருத்தப்பட்ட பதிவு செய்யப்படாத சொகுசு காரை வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தவைவை ☞ 2

# தமிழ் அரசுக் கட்சி என்ற அசல் இருக்கையில் நகல்களுக்கு வாக்களிக்கத் தேவையில்லை

### இப்படிச் சொல்கிறார் சுமந்திரன்

சமஷ்டித் தீர்வை இழிவாகப் பேசிய அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியே இப்போது சமஷ்டிதான் தீர்வு என்று ஏற்றுக்கொண்டுள்ளது. ஆகவே சமஷ்டியேதீர்வுஎனகூறிவந்ததமிழ்அரசுக் கட்சியான அசல் நாங்கள் இருக்கும்போது நிழல்களுக்கு மக்கள் வாக்களிக்க வேண்டிய தேவையில்லை என்று யாழ். தேர்தல் மாவட்ட தமிழ் அரசுக் கட்சி வேட்பாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்றுச் செய்தியாளர்களைச் சந்தித்த அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

இது மாற்றத்திற்கான தேர்தல் எனச் சொல்லப்படுகிறது. மாற்றத்தின் ஆரம்பம் என ஜனாதிபதி தேர்தலைச் சொல்கின்றனர். ஒருவகையில் அது சரிதான். காலம் காலமாக இரண்டு கட்சிகள்தான் மாறி மாறி ஆட்சி செய்து வந்தன, தற்போது பெரும் ☞ 2

## 23 ஆயிரம் பன்றிகள் இறப்பு

ஆப்பிரிக்க பன்றிக் காய்ச்சல் (ASF) மற்றும் போர்சின் இனப்பெருக்க மற்றும் சுவாசநோய்க்குறி (PRRS) ஆகியவற்றின் காரணமாக மேற்கு மற்றும் வடமேற்கு மாகாணங்களில் சுமார் 23,000 பன்றிகள் இதுவரை இறந்துள்ளதாக அரச கால்நடைத் திணைக்களங்கள் உறுதிப்படுத்தியுள்ளன.

மேல் மாகாண பண்ணைகளில் 11,000 முதல் 13,000 பன்றிகளும் வடமேல்மாகாணபண்ணைகளில்சுமார் 10,000 பன்றிகளும் இந்த நோய்த் ☞ 2

## பெற்றோல் விலை மாறவில்லை

மக்கள் அதிகளவில் பயன்படுத்தும் பெற்றோல் மற்றும் டீசல் விலைகளில் மாற்றம் செய்யப்படவில்லை. பதிலாக 95 ஒக்டேன் பெற்றோல் மற்றும் சுப்பர் டீசலின் விலை லீற்றர் ஒன்றுக்கு ☞ 2



## திருடர்களைப் பிடிக்க அவசரப்படமாட்டோம்

### பிரதமர் ஹரினி தெரிவிப்பு

திருடர்களைபிடிக்கஏன் இவ்வளவு கால அவகாசம் என்று திருடர்களே எங்களிடம் கேட்டாலும் அவர்களை பிடிக்க நாம் அவசரப்படப்போவதில்லை என்று பிரதமர் ☞ 8

## மகிந்தவின் பாதுகாப்பு படையினர் குறைப்பு

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் பாதுகாப்பிற்காக நியமிக்கப்பட்டிருந்த படையினரின் எண்ணிக்கை 60ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. ☞ 2

### அநுர ஆட்சியில்

## 2 அல்லது 3 அமைச்சுகள் கிடைத்தால் பரிசீலிக்கத் தயாராக இருக்கவேண்டும்

### சுமந்திரன் கருத்து

அநுர அரசில் இரண்டுமூன்று அமைச்சுப் பதவிகள் கிட்டினால் அதனைப் பரிசீலித்துப் பார்க்க நாம் தயாராக இருக்கவேண்டும் என்று தெரிவித்திருக்கிறார் தமிழ் அரசுக் கட்சியின் யாழ். தேர்தல் மாவட்ட வேட்பாளர் சுமந்திரன்.

யாழ். நகரில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் இதனையும் வலியுறுத்தினார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தல் பரப்புரைக் காலத்தில் அமைச்சுப் பதவிகள் ☞ 8

## பொலிஸ் நடவடிக்கையை பொதுமக்கள் காணொளி எடுக்க முழு உரிமை உண்டு

கடமைநேரத்தில்பொலிஸாரை வீடியோ எடுக்க பொதுமக்களுக்கு உரிமைஇருக்கின்றதுஎன்பதைப் பொலிஸ்திணைக்களம்உறுதிப்படுத்தியுள்ளது.

பொலிஸ் உத்தியோகத்தர்களின் கடமைகளை வீடியோ பதிவு செய்வதற்கான பொது உரிமையை உறுதிப்படுத்தும் வகையில் பொலிஸ் திணைக்களம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

சட்டக் கட்டுப்பாடுகள் இன்றி காவல்துறை நடவடிக்கைகளை ஆவணப்படுத்த குடிமக்கள் அனுமதிக்கப்படுகிறார்கள் என்று அந்த அறிக்கை தெளிவுபடுத்துகிறது.

இருந்தாலும் கடந்த காலங்களில் பொலிஸாரின் நடவடிக்கைகளை ☞ 2

## இனி இது .....

வடக்குக்கான தொடருந்துப் பாதையை அநுராதபுரம் வரை மறுசீரமைக்கும் பணிகள் காரணமாக கொ-ழும்புக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையிலான தொடருந்துப் பயணங்கள் பல மாத காலமாக நிறுத்தப்பட்டிருந்தன. சில நாள்களின் முன்னர்தான் அது மீண்டும் தொடங்கப்பட்டது. யாழ்ப்பாணத்திற்கான சேவைகள் மீண்டும் தொடங்கப்பட்ட நிலையில், யாழ். தேவி மற்றும் இரவு நேரத் தபால் தொடருந்து என்பன இயங்கத் தொடங்கின. ஆனால், பகல் நேரத்தில் இயக்கப்படும் ஏசி தொடருந்து இயக்கம் பற்றி அறிவிக்கப்படவில்லை.

தொடருந்து நிலைய அதிபர்கள் வேலை நிறுத்தம் காரணமாக இந்த ஏசி தொடருந்தின் இயக்கம் தொடர்பில் பயணிகளுக்குச் சரியான முன்னறிவிப்பு எதுவும் வழங்கப்படவில்லை. நிலைய அதிபர்கள் தவிர மற்றைய பணியாளர்கள் வேலை செய்வதால், நேற்று இந்த ஏசி தொடருந்தை அதனுடைய அட்டவணைப்படி சாரதிகள் எடுத்துக்கொண்டு கிளம்பி விட்டார்கள்.

520 முதற்றர இருக்கைகள் கொண்ட இந்தத் தொடருந்து கொழும்பில் இருந்து பயணத்தைத் தொடங்கியபோது அதில் இருந்தவர்களின் எண்ணிக்கை 44 மட்டுமே. 476 இருக்கைகள் வெறுமையாக விடப்பட்டிருந்தன. அதே தொடருந்து யாழ்ப்பாணத்தில் இருந்து திரும்பும்போது 465 ஆசனங்கள் வெற்றிடமாக இருந்துள்ளன. இதனால் தொடருந்துத் திணைக்களத்திற்கு 30 லட்சம் ரூபாய் நட்டம் ஏற்பட்டுள்ளது என்று தொடருந்து நிலைய அதிபர்கள் சங்கம் தெரிவித்திருக்கிறது. என்னே ஒரு திறமையான நிர்வாகம்.

அந்தத் தொடருந்தில் பயணிக்கக் கிடைத்தவர்களுக்கு யோகம்தான். பெட்டிக்கு 5 பேர் என்ற கணக்கில் குதூகலமாகப் பயணித்திருப்பார்கள் போலும்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## தமிழ் அரசுக் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாற்றமாக மூன்றாவது தரப்பு ஆட்சியை பிடித்துள்ளது.

அவர்கள் ஆட்சியை பிடிக்க ஒரு தடவை அல்ல இரண்டு தடவைகள் ஆயுதம் ஏந்திப் போராடியவர்கள். ஊழல் அரசியலில் இருந்து மாற்றம்வேண்டும் என மக்கள் விரும்பினார்கள். அதனால் தான் 69 இலட்ச மக்களின் வாக்குகளை பெற்று ஜனாதிபதியாக இருந்தவரை நாட்டை விட்டு துரத்தினர். அப்படி செய்தும் மக்கள் எதிபார்த்த மாற்றம் வராததால் இரண்டரை வருடங்கள் காத்திருந்து, தேர்தல் ஊடாக மாற்றத்தை ஏற்படுத்தி உள்ளனர்.

மாற்றம்வேண்டும் என மக்கள் விரும்பினார்கள். அதற்குத் தீர்வாக அவர்கள் முன் தேசிய மக்கள் சக்தி மட்டுமே இருந்தது. அதனால் மக்கள் அதற்கு வாக்களித்தனர். ஆனால், தமிழ் மக்களின் அரசியலில் 75 வருடங்களுக்குமேலாக நாங்கள் மாற்றத்தைத் தேடுகிறோம். அதற்காக பல வழிகளில் போராடி, பல உயிர்களை இழந்துள்ளோம்.

எங்களுடைய மக்கள் 75 வருட காலமாக நியாயமான அரசியல் மாற்றத்தை எதிர்பார்த்து காத்திருக்கின்றனர். தமிழ் மக்கள் விரும்பிய இந்த அரசியல் மாற்றத்தில் தெற்கு மக்கள் பங்குதாரர்களாக வரவில்லை.

தற்போது மாற்றம் எனக்கூறி ஆட்சி பீடம் ஏறியுள்ள தேசிய மக்கள் சக்தியினரின், தேர்தல் கால வாக்குறுதிகள் ஒன்றன் பின் ஒன்றாகச் சறுக்கத் தொடங்கிவிட்டன.

பயங்கரவாத தடுப்பு சட்டத்தை நீக்குவது என்ற கோரிக்கையை ஜே.வி.பி யினரும் இணைந்து முன் வைத்தனர். பயங்கரவாத தடுப்பு சட்டம் முற்றாக நீக்கவேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருந்தவர்கள் தற்போது ஆட்சிக்கு வந்த பின்னர், பயங்கரவாத தடுப்பு சட்டத்தை நீக்க தேவையில்லை. அதனை துஷ்பிரயோகம் செய்யாது இருந்தால்போதும் என சொல்கின்றனர். இதொரு குத்துக்கரணம்.

பயங்கரவாதத் தடுப்பு சட்டத்தால் தமிழ் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். அதேபோலதான் ஜேவிபியினரும் பாதிக்கப்பட்டனர். அதனால் அதனை நீக்க வேண்டும் என முதலில் கூறியவர்கள் தற்போது அதனை துஸ்பிரயோகம் செய்யாது இருந்தால் போதும் என்கின்றனர்.

இவ்வாறாக மக்களுக்கு தேர்தலுக்கு முன்னர் கொடுத்த வாக்குறுதிகள் ஒன்றன் பின் ஒன்றாக காற்றில் பறக்க விடப்படுகிறன. ஜனாதிபதி தேர்தல் முடிவின் வரைபடத்தில் கோட்டாபய ராஜபக்சேவிற்கும் அநுரகுமார திசநாயக்கவிற்கும் கிடைத்த வாக்குகளில் பெரிய வித்தியாசம் இல்லை. என்பது தெளிவாக தெரியும். அதாவது சிங்கவர்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதியைத்தவிர ஏனைய பகுதியில் அநுராவிற்கு வாக்குகள் கிடைக்கவில்லை.

வடக்கு கிழக்கு மக்கள் 75 வருட காலமாக ஒரே நிலைப்பாட்டில்தான் உள்ளனர். அதிகாரங்களைச் சரியாக பகிர்ந்தளிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே உள்ளனர். சமஷ்டிக் கட்டமைப்பாக அது மாற வேண்டும். அந்த நிலைப்பாட்டை நாங்கள் முன் கொண்டு செல்ல நாடாளுமன்றுக்கு மிக பெரும் பலத்துடன் செல்ல வேண்டும்.

சமஷ்டி என்ற எண்ணத்தையே இழிவாகப் பேசி அதனைப் பழித்து உரைத்துக்கொண்டிருந்த அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்கூட இப்போது சமஷ்டி தான் தீர்வு என ஏற்றுக்கொண்டுள்ளது. எனவே நாம் முன் வைத்த சமஷ்டி தீர்வையே அனைத்துத் தமிழ் கட்சிகளும் இன்றைக்கு ஏற்றுக்கொண்டுள்ளன. எனவே அசல் நாங்கள் இருக்கும் போது நிழலுக்கு வாக்களிக்கவேண்டிய தேவையில்லை - என்றார்.

## பெற்றோல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

6 ரூபாயினால் குறைக்கப்பட்டுள்ளதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நேற்று மாலை அறிவித்தது.

இதன்படி, ஒக்டேன் 95 பெற்றோல் லீற்றர் ஒன்றின் புதிய விலை 371 ரூபாவாகவும், சுப்பர் டீசல் லீற்றர் ஒன்றின் புதிய விலை 313 ரூபாவாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

92 ஒக்டேன் பெற்றோல், சிலோன் ஒயிட் டீசல் மற்றும் மண்ணெண்ணெய் ஆகியவற்றின் விலைகளில் மாற்றம் இல்லை, அதன்படி 92 ஒக்டேன் பெற்றோலின் விலை 311 ரூபாயாகவும், சிலோன் ஒயிட் டீசலின் விலை 283 ரூபாயாகவும் உள்ளது. மண்ணெண்ணெய் ரூ. 183 ஆக உள்ளது.

## மகிந்தவின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயரடுக்கு பாதுகாப்பு உத்தியோகத்தர் நியமனக் குழுவினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி, பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரியவின் உத்தரவுக்கு அமைவாக விசேட பாதுகாப்புப் பிரிவின் பிரதிப் பொலிஸ் மா அதிபரின் சிபாரிசுகள் அடங்கிய சுற்றறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் பாதுகாப்பிற்காக 60 அதிகாரிகள், 2 ஜீப் வண்டிகள், 2 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் ஒரு முச்சக்கரவண்டி என்பன வழங்கப்பட்டுள்ளன.

மகிந்தவின் பாதுகாப்பில் இருந்த -நீக்கப்படும் படையினரின் பட்டியலை, நாளை சனிக்கிழமைக்கு முன், அந்தப் பிரிவுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபரிடம் பெற்றுக்கொள்ளவேண்டும் என்றும், மகிந்தவின் பாதுகாப்புக்காக ஒதுக்கப்பட்டிருந்த மேலதிக வாகனங்களை ஞாயிற்றுக்கிழமைகாவல்துறைபோக்குவரத்து பிரிவில் ஒப்படைக்க வேண்டும் என்றும் சுற்றறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இந்தத் தகவல் வெளியானதைத் தொடர்ந்து, மகிந்தவின் பாதுகாப்பு ஆளணி குறைக்கப்பட்டதால் அவருக்கு ஏதாவது விபரீதங்கள் நேர்ந்தால் அதற்கு இந்த ஆளும் தரப்புத்தான் பொறுப்பேற்கவேண்டும் என்று சட்டத்தரணி மனோர் கமகே சாடியிருக்கிறார்.

றொஸ்மிட் பிளேஸில் உள்ள ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன கொள்கை மையத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசும்போது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

முறையான பாதுகாப்பு மதிப்பீட்டின் ஊடாக 2020 மார்ச் 19 எடுக்கப்பட்ட அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் மஹிந்த ராஜபக்சவின் பாதுகாப்பை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. அந்த முடிவை ஜனாதிபதி அல்லது உப குழுகள் மாற்றுவது சட்டவிரோதமானது என்றும் சட்டத்தரணி மனோஜ் கமகே தெரிவித்தார்.

## 23 ஆயிரம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாக்கத்திற்கு ஆளாகியுள்ளதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன. இதன் எதிரொலியாக, கால்நடை அதிகாரிகள் மற்றும் புலனாய்வுக் குழுவினர் பாதிக்கப்பட்ட விலங்குகளின் மாதிரிகளை விரிவான சோதனைக்கு உட்படுத்தியுள்ளனர். தொற்றுநோய்களை கட்டுப்படுத்த தடுப்பூசி முயற்சிகள் நடைபெற்று வருவதாகவும் அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

நோய் பரவுவதைத் தணிக்கவும், பாதுகாப்பான உற்பத்தி நடைமுறைகளை உறுதிப்படுத்தவும், அரசு கால்நடை மருத்துவ சேவைகள் வழிகாட்டுதல்களை வெளியிடத் தயாராகி வருகின்றன. இந்த அறிவுறுத்தல்கள், நோயற்ற பண்ணைகளில் இருந்து விலங்குகளை நகர்த்துவதற்கான நெறிமுறைகள் மற்றும் உணவுக்காக அவற்றைக் கொல்வதற்கான நடைமுறைகள், பன்றி இறைச்சி விற்பனைக்கான நடைமுறைகள் போன்றவற்றை உள்ளடக்கியிருக்கும்.

நோய் மேலும் பரவாமல் தடுக்க கடுமையான கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை அறிமுகப்படுத்துவதில் அதிகாரிகள் கவனமாக இருக்கின்றனர்

## சிங்கள....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வவுனியாவில் நேற்றுச் செய்தியாளர்களைச் சந்தித்த அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் கட்சிகள் ஒற்றுமை தொடர்பாக காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினரால் வெளியிடப்பட்டுள்ள ஆதங்கம் உண்மையானது. அதனை நாம் ஏற்றுக்கொள்கின்றோம். ஆசனங்களுக்காகவே பிரிந்து நிற்கின்றோம் என கூறினார்கள். இந்த தேர்தலில் தமிழ் கட்சிகளாகிய நாம் அனைவரும் ஒரு பொதுச் சின்னத்தின் கீழ் போட்டியிடுவோம் என்று முயற்சிகளை எடுத்திருந்தோம். அது சாத்தியப்படவில்லை. எனவே அது மனவேதனையைத் தருகிறது.

திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்டங்களிலாவது ஒன்று சேர்ந்து போட்டியிடத் தீர்மானித்தோம். ஆனால் அம்பாறையில் தமிழ் அரசுக் கட்சி குழப்பிவிட்டது. அம்பாறையில் பிரதிநிதித்துவத்தை இழக்கும் நிலை தமிழரசுக் கட்சியால் ஏற்பட்டுள்ளது. இருப்பினும் நாம் ஐந்து கட்சிகள் தற்போது ஒன்றாக இருக்கிறோம். ஏனையவர்களையும் உள்ளேகொண்டுவருவதற்கான முயற்சிகளை தொடர்ந்தும் செய்வோம். மக்கள் கோபத்தில் உள்ளார்கள். நாங்கள் பிரிந்ததால் அவர்கள் வெறுப்படைந்து உள்ளார்கள். நாங்கள் போகும்போது அவர்கள் அதனை நேரடியாகவே கூறுகிறார்கள்.

தேர்தலின் பின்னராவது தமிழ் கட்சிகள் இணைந்து செல்வதற்கான வாய்ப்புக்கள் உருவாக்கப்படவேண்டும். அத்துடன் தேர்தலின் பின்னர் ஒற்றுமையை விரும்பாதவர்கள் மீது மக்களின் கோபம் பிரதிபலித்திருக்கும். அவ்வாறு மக்கள் பாடம் புகட்டும்போது ஒற்றுமையினை ஏற்படுத்துவதற்கான சந்தர்ப்பங்கள் ஏற்படலாம். எனவே மக்களின் விருப்பத்திற்கு மாறாக செயற்படுபவர்களை அவர்களே பார்த்துக் கொள்வார்கள்.

கடந்த ஆளும்தரப்பில் அரச ஊழியர்களுக்கான சம்பள உயர்வு அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் இந்த ஆளும்தரப்பும் புதிய ஜனாதிபதியும் அது தொடர்பான கருத்துக்களைக் கூற மறுக்கின்றனர். எனவே அரசஊழியர்களுக்கு அதிகரிக்கப்படவுள்ளதாக சொல்லப்பட்ட ஊதியம் கூட்டப்படவேண்டும். எமது கட்சி இதற்காகத் தொடர்ந்தும் குரல்கொடுக்கும்.

நாடாளுமன்றத்தேர்தலில் ஆசனங்களைக் கூடுதலாக எடுக்கவேண்டும் என்பதை நோக்கமாக கொண்டே ஊழல் விசாரணைகள் தொடங்கப்படும் என அரசால் காட்டப்படுகிறது. அத்துடன் மாகாணசபை முறைமையை ஒழிக்கவேண்டும் என்பது இந்த ஆளும்தரப்பின் குரலாக உள்ளது. குறிப்பாகப் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை ஒழிக்கவேண்டும் என்று குரல் கொடுத்தவர்கள் இவர்களே. ஆனால் அதனை நீக்குவதற்கான சூழலில் அவர்கள் இருப்பதுபோல் தெரியவில்லை.

இடதுசாரி அரசியலை அடித்தளமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட மக்கள் விடுதலை முன்னணி இன்று சிங்கள தேசியவாதத்தோடு இணைந்து செயற்படுகின்றது. அந்த வகையில் திடமான ஒரு ஆளும்தரப்பை அமைவதற்கான வாய்ப்புக்கள் குறைவாகவே இருக்கும். எனவே நாம் 11 ஆசனங்களை பெறும்போது அதிகாரம் மிக்கவர்களாக இருப்போம். இம்முறை தமிழ்த் தரப்பை புறந்தள்ளி புதிய ஆளும்தரப்பை அமைக்க முடியாது. அதனை நிர்ணயிக்கின்ற சக்தியாக தமிழ்த் தரப்பு இருக்கும் - என்றார்

(100)

## கைதான ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நவம்பர் 7 வரை விளக்கமறியலில் வைக்குமாறு நுகேகொட மேலதிக நீதிவான் சஞ்சய் விஜேசிங்க உத்தரவிட்டார்.

மிரிஹான தலைமையகத்தின் பொலிஸ் பொறுப்பதிகாரி மஞ்சுள துஷார மற்றும் குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் நுவான் பிரபாத் ஆகியோர் லொஹான் ரத்வத்தையை கைது செய்து நீதிமன்றத்தில் நிறுத்தினர். சுங்கக் கட்டளைச் சட்டம், தண்டனைச் சட்டம், மோட்டார் வாகனக் கட்டளைச் சட்டம், பணச் சலவைச் சட்டம், பொது சொத்து சட்டம் ஆகியவற்றின் கீழ் லொஹான் மீது குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படவுள்ளன என்று அவர்கள் நீதிமன்றத்திற்கு அறிவித்தனர். அதனால் லொஹானை விளக்க மறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார்.

லொஹானின் மனைவி ராஷி பாபாவின் பெயரில் மீரிஹான ஒளம்துயா மண்டபவீதியில் உள்ள வீட்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்த பல கோடி ரூபாய் பெறுமதியான இலக்கத் தகடுகள் அற்ற சொகுசுக் கார் ஒன்றை பொலிஸார் சில தினங்களுக்கு முன்னர் கைப்பற்றினர்.

இந்தக் கார் நாட்டுக்குள் பாகங்களாகக் முறைகேடாகக் கடத்திவரப்பட்டு பின்னர் இலங்கையில் பொருத்தப்பட்டுள்ளது. அத்துடன் மோட்டார் வாகனச் சட்டங்களின் கீழ் பதிவு செய்யப்படாத இந்தக் கார், போலி இலக்கத்தகட்டுடன் பயன்படுத்தப்பட்டும் வந்துள்ளது. இந்தக் காரை, அண்மையில் உயிரிழந்த தனது அரசியல் உதவியாளர் ஒருவரே தமது வீட்டில் கொண்டு வந்து நிறுத்தினார் என்றும் அந்த கார் பற்றிய விவரங்கள் எவையும் தமக்குத் தெரியாது என்றும் லொஹான் தம்பதியினர் வாக்குமூலம் வழங்கியிருந்தனர்.

ஆனால், அந்த சொகுசு காரை லொஹான் ரத்வத்த பயன்படுத்தியதற்கும் அதில் அவர் பயணம் செய்ததற்குமான காணொலி மற்றும் ஒளிப்பட ஆதாரங்களைப் பொலிஸார் சேகரித்துள்ளார்கள்.

## பொலிஸ். ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒளிப்பதிவு செய்தார்கள் என்பதற்காக தனிநபர்களின் கமெராக்கல், அலைபேசிகள் (மொபைல் ஃபோன்) என்பவற்றைச் சில அதிகாரிகள் பறித்தல் அல்லது அத்தகைய நவர்களைத் தடுத்து வைத்தல் போன்ற சம்பவங்களில் சில அதிகாரிகள் ஈடுபட்டார்கள் என்பதையும் அந்த அறிக்கை ஏற்றுக்கொண்டுள்ளது. ஆனால் அவ்வாறு பொதுமக்கள் பொலிஸாரின் நடவடிக்கைகளை காணொலியாகப் பதிவு செய்வதைத் தடுக்க பொலிஸாருக்கு எந்த சட்டபூர்வ அ-னுமதியும் இல்லை என்றும் அறிக்கை வலியுறுத்துகின்றது.

1995 ஆம் ஆண்டின் 14 ஆம் எண் சான்றுகள் (சிறப்பு விதிகள்) சட்டத்தின் பிரிவு 4இன் படி, செம்மைப்படுத்தப்படாத வீடியோ பதிவுகள் சட்ட நடவடிக்கைகளில் ஆதாரமாக ஏற்றுக்கொள்ளப்படும். கிரிமினல் மற்றும் சிவில் வழக்குகளில் முறைப்பாட்டாளர்கள் மற்றும் பிரதிவாதிகள் இருவருக்கும் இந்த விதி பொருந்தும், நீதிமன்றத்தில் சரியான ஆதாரமாக வீடியோ பதிவுகளின் பங்கை இந்த விதி அடிக்கோடிட்டுக் காட்டுகிறது என்றும் அறிக்கை மேலும் தெரிவிக்கின்றது.

## ஜனநாயகச்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

நாணய உருவாக்கம் மற்றும் பணப்புழக்கம் தொடர்பில் ஆளும்தரப்புக்குச் சரியான புரிதல் இல்லை எனவும் ரணில் தெரிவித்துள்ளார். இது பற்றி புரியாமல் வேறு யாரையும் அல்லது ஊடகங்களையும் எப்படி குற்றம் சாட்ட முடியும் என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

பத்தரமுல்லை சீலரதன தேருக்குப் பணப்புழக்கம் பற்றிய நல்ல புரிதல் இருப்பதாகவும், அனுபவமின்மையால் அரசாங்கத்தின் மூன்று அமைச்சர்களுக்கும் அது பற்றி தெரியாது என்றும் அவர் கூறுகிறார்.

புதிய ஜனநாயக முன்னணியின் வேட்பாளர்களின் வெற்றிக்காக கண்டியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உதய ஆர் செனவிரத்ன அறிக்கை

தொடர்ச்சி 8ம் பக்கம்....

காலைக்கதிர் Kalaikkathir

# எமது மாவீரர்கள் நினைவாக ஆளுக்கொரு மரம் நடுவோம்

## பொ.ஐங்கரநேசன் கோரிக்கை



போரின் முற்றுகைக்குள்ளும் இயற்கை எனது நண்பன் என்று சொல்லி சூழல் நல்லாட்சி ஆணையம், வனவளப் பாதுகாப்புப்பிரிவு என்பனவற்றை உருவாக்கி எமது சூழலைப் பேணிப் பாதுகாத்ததலைமைத்துவத்தைக் கொண்டிருந்தவர்கள் நாங்கள். மரங்களை ஆதித் தெய்வங்களாக வழிபட்ட நாம் இறந்தவர்கள் நினைவாக மரங்களை நாட்டும் தொல் மரபையும் கொண்டிருந்தோம்.

இந்தப் பண்பாட்டு மரபே காலநிலை மாற்றங்களின் தாக்குதல்களில் இருந்து எம்மையும் எம்பூமியையும் காப்பாற்றும்.

அந்தவகையில்மாவீரர்களைப் போற்றும் இப் புனித கார்த்திகையில் பண்பாட்டின் தொடர்ச்சியைப் பேணி அவர்களின் நினைவாகவும், காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளவும் ஆளுக்கொரு மரம் நடுவோம் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவரும்சனநாயகதமிழரசுகூட்டமைப்பின் வேட்பாளருமான பொ. ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

வடக்குமாகாணசபையின்தீர்மானத்துக்கு அமைவாக 2014 ஆம் ஆண்டுமுதல் கார்த்திகை மாதம் வடமாகாண மரநடுகை மாதமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. இதனை முன்னிட்டு பொ. ஐங்கரநேசன் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிடு கையில் -

உலகம் இன்று எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளில் தலையாய பிரச்சினையாகக் காலநிலை மாற்றம் உருவெடுத்துள்ளது.

பூமியின் சராசரி வெப்பநிலை ஆண்டுக்கு ஆண்டு எகிறிவருகிறது. காட்டுத்தீயும் வெப்ப அலைகளும் முன்னெப்போதையும்விட மூர்க்கம் கொண்டு பொசுக்கி வருகிறது. இன்னொருபுறம், பருவம்தப்பிக் கடும்மழை கொட்டுகிறது.

வருடாந்த மழை வீழ்ச்சி ஓரிரு நாள்களிலேயே பேய்மழையாகப் பொழிகிறது. இவை ஏற்படுத்தும் வெள்ளப்பெருக்கிலும் மண்சரிவிலும் சிக்கி உலகம் பூராகவும் ஆண்டுதோறும் பல்லாயிரக்கணக்கானோர் பலியாகி வருகிறார்கள்.

துருவப் பகுதிகளில் உள்ள பனிமலைகள் உருகி வருவதன் காரணமாகக் கடல் மட்டம் உயர்ந்து செல்கிறது. இதனால், உலகநாடுகள் பலவற்றின் கரையோரங்களைக் கடல்நீர் விழுங்கத் தொடங்கியுள்ளது. இதற்கு இலங்கைத் தீவும் விதிவிலக்கல்ல.

கடல் மட்ட உயர்வால் யாழ். குடாநாடு ஆனையிறவுப்பகுதியில் கடலால் துண்டிக்கப்பட்டுத் தனித் தீவாக உருவாகும் என்று எதிர்வு கூறப்பட்டுள்ளது.

உலகம் இன்று அனுபவிக்கத் தொடங்கியுள்ள இந்த அவலங்களுக்குக் கரிக்காற்றை உறிஞ்சுகின்ற காடுகளை அளவுகணக்கில்லாமல் நாம் அழித்துத் தள்ளுவதே அடிப்படைக் காரணமாகும்.

பூமிசூடாகிவருவதன்எதிர்விளைவுகளாகக் கடும் வறட்சி ஏற்பட்டுத் குடிநீருக்காக நெடுந்தொலைவு அலைய வேண்டி ஏற்படும்.

பயிர்களின் உற்பத்தி வீழ்ச்சியடைந்து உணவுப் பாதுகாப்புக் கேள்விக்குறியாகும். கால்நடை வளர்ப்பைக் கைவிடவேண்டி ஏற்படும். வளியில் மாசுகள் அதிகரித்துச் சுவாசநோய்களால் மூச்சுத்திணற வேண்டி ஏற்படும்.

மன அழுத்தம் ஏற்பட்டுத் தற்கொலை உணர்வு தூண்டப்படும் எனவும் விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.

காலநிலை மாற்றங்களை எதிர்கொள்வதற்கு இப்போதிருந்தே நாம் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளாவிடில் தாங்கொணாத் துயரங்களை அனுபவிக்க நேரிடும் என்றும் எச்சரித்துள்ளார். - என்றுள்ளது.(05)

# பனை அபிவிருத்திச் சபை தலைவர் நியமனம் தேர்தல் சட்ட விதி மீறல்

## தேர்தல் ஆணைக்குழுவில் ட்ரான்ஸ்பேரன்சி அமைப்பு முறைப்பாடு

தேர்தல்சட்டங்களுக்கு முரணானவகையில் அண்மையில் யாழ்ப்பாணத்தில் உள்ள பனை அபிவிருத்திச்சபையால் மேற்கொள்ளப்பட்ட நியமனங்கள் தொடர்பில், செவ்வாய்க்கிழமை ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நெஷனல் ஸ்ரீலங்கா நிறுவனமானது, இலங்கை தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளது.

ஒக்ரோபர் 10 ஆம் திகதி அன்று பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் பதவிக்கு செல்வின் இரேனியஸ் மரியாம்பிள்ளை நியமிக்கப்பட்டதோடு, அதைத் தொடர்ந்து 12 நாள்கள் இடைவெளியில் அவர் நீக்கப்பட்டு, அவருக்குப் பதிலாக விநாயகமூர்த்தி சகாதேவன், ஒக்ரோபர் 22 அன்று அதே பதவிக்கு நியமிக்கப்பட்டார்.

மேலும், தேர்தல்கள் ஆணைக்குழு விதித்துள்ள தடைகளுக்கு மத்தியிலும் தலைவர்கள் மாற்றம் மற்றும் பல புதிய நிர்வாகசபை உறுப்பினர்களை நியமிப்பதற்கு பொறுப்பான அமைச்சர் அனுமதி அளித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

செப்ரெம்பர் 25 அன்று இலங்கை தேர்தல்கள் ஆணைக்குழுவால் வெளியிடப்பட்ட வர்த்தமானியில் மற்றும் தேர்தல் சட்டத்தில், குறிப்பாக அரச அதிகாரிகள் தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன் அனுமதி பெறாமல், தேர்தல் காலத்தில் அரச நிறுவனங்களில் எந்தவொரு ஆட்சேர்ப்பு, நியமனங்கள், பதவி உயர்வுகள் அல்லது இடமாற்றங்களை மேற்கொள்வதற்குதடை விதிக்கப்பட்டுள்ளது எனத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த முக்கியமான தேர்தல்காலகட்டத்தில் சட்டத்தை மதிக்காத வகையில் அரசாங்கம் நடந்துகொள்வது கேள்விக்குரிய சூழ்நிலையை எழுப்புகிறது.

இவ்வாறான நியமனங்கள் மூலம், பொதுமக்களின் நம்பிக்கை பலவீனப்படுத்துவதுடன் தேர்தல் நடைமுறையின் நேர்மைக்கும், ஜனநாயக செயல்முறையின் நியாயத்தன்மையும் கேள்விக்குட்படுத்தப்படலாம். இது குறித்து இலங்கை தேர்தல்கள் ஆணைக்குழு விசாரணைகளை நடத்தி உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நெஷனல் ஸ்ரீலங்கா கோருகிறது.

பொது நிறுவனங்கள் மீதான அரசியல் பக்கச்சார்பு அல்லது தேவையற்ற செல்வாக்கின் சந்தேகங்களைத் தவிர்ப்பதற்காக பொதுத் தேர்தல் முடியும் வரை பொது நிறுவனங்களில் இத்தகைய நியமனங்களை இடைநிறுத்துமாறு ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நெஷனல் ஸ்ரீலங்கா மேலும் அரசாங்கத்தை வலியுறுத்துகிறது.

மேலும், வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை உறுதி செய்வதில் அர்ப்பணிப்புடன் செயற்பட்டுக்கொண்டு இருக்கும் ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நெஷனல் ஸ்ரீலங்கா நிறுவனமானது இவ்வாறான நிலைமைகளை தொடர்ந்தும் கண்காணிப்பதோடு, பொது நிறுவனங்களில் நெறிமுறை மற்றும் சட்ட வழிகாட்டுதல்களைக் கடைப்பிடிக்க வேண்டும் என கோருகின்றது. (05)

# பாடசாலை மாணவர்கள் இடையில் ஏற்பட்ட தகராறால் நால்வர் காயம்

குருணாகல் , உடபதலவ பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் மாணவர்களுக்கு இடையில் ஏற்பட்ட தகராறில் நான்கு பேர் காயமடைந்துள்ளனர் என குருணாகல் பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பில் தெரியவருவதாவது, -

குருணாகல் , உடபதலவ பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் உயர்தர மாணவர்கள் சிலர் கடந்த 29 ஆம் திகதி அன்று பாடசாலைக்கு முன்பாக தகராறில் ஈடுபட்டுள்ளனர்.

தகராறின் போது, பேப்பர் கட்டர் உள்ளிட்ட கூரிய ஆயுதங்களால் தாக்கப்பட்டு காயமடைந்த நான்கு மாணவர்கள் குருணாகல் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து, இந்த சம்பவம் தொடர்பில் மாணவன் ஒருவன் சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை குருணாகல் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)




# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## சர்ச்சைக்குப் பஞ்சமிருக்காது

தமிழ் அரசுக் கட்சியின் பேச்சாளர் சுமந்திரனுக்கும் சர்ச்சைகளுக்கும் இடையில் மிக நெருங்கிய தொடர்புகள் இருக்கின்றன. தேர்தல் நெருங்கிவரும் நிலையில் மற்றொரு சர்ச்சைக்கு அவர் பிள்ளையார்சுழி போட்டிருக்கின்றார். கொழும்பு அரசில் தமிழ் அரசுக் கட்சியினர் அமைச்சுப் பதவிகளைப் பெறுவது தொடர்பில் பரிசீலிக்க வேண்டும் என்கிற அவரது கருத்து நிச்சயம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தும் என்பது நிச்சயம். தேர்தல் நேரத்தில் எதிர்த் தரப்புக்கள் இதனையே தமிழ் அரசுக் கட்சிக்கு எதிரான ஆயுதமாகத் தூக்கிக் கொள்வார்கள். தமிழ் அரசுக் கட்சியினர் அமைச்சுப் பதவிகளுக்கு விலைபோய்விட்டார்கள் என்று தூற்றுவார்கள்.

உண்மையில் சுமந்திரன் அமைச்சுப் பதவிகளைப் பெறப்போகின்றோம் என்று கூறவில்லை. அப்படிப்பட்ட ஒரு நிலை வந்தால், தனிநபர்களாக மக்களுக்குப் பயனற்ற வகையில் அமைச்சுப் பதவி பெறாமல், கட்சி ரீதியாக ஒரு முடிவெடுத்து மக்கள்நலனனுக்காக இரண்டு, மூன்று அமைச்சுப் பதவிகளைப் பெற்று பயனுள்ள வகையில் ஏதாவது செய்யலாமா என்பது பற்றிச் சிந்திக்கவேண்டும் என்றுதான் கூறியிருக்கிறார். இது அவரது சொந்த நிலைப்பாடு. இப்போதல்ல அவர் நீண்ட காலமாகவே இந்த நிலைப்பாட்டைக் கொண்டிருக்கிறார். எந்தவொருவாய்ப்பையும்தட்டிக்கழிக்காமல்அவற்றையெல்லாம் பயன்படுத்திக்கொள்ளவேண்டும் என்பதே அவரது குறிக்கோள். அந்த வகையில், போரால் பாதிக்கப்பட்ட மக்கள் வாழும் வடக்கு கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் அரசுக் கட்சி கொள்கை நிலைப்பட்டு, போர்ப் பாதிப்பிலிருந்து மக்களை மீட்டெடுக்கும் விதத்தில் அமைச்சுப் பதவிகளைப் பெறுவது தொடர்பாகப் பரிசீலிக்கவேண்டும் என்பது அவரது நீண்டநாள் கருத்தாக அமைந்திருக்கிறது. ஆனால், கட்சிக்குள் அவரது இந்த யோசனைக்குஇதுவரையில்வரவேற்புஇருந்ததில்லை. இனியும் வரவேற்பு இருக்கும் என்று எதிர்பார்க்க முடியாது. அரசியல் தீர்வு ஒன்றைப் பெறாமல் கொழும்பு அரசியல் பங்கேற்கக்கூடாது என்று தாங்களே வெட்டிக்கொண்ட புதைகுழிக்குள் இருந்து தமிழ் அரசுக் கட்சியினர் வெளிவருவது அவ்வளவு சுலபமான காரியமல்ல.

இருந்தபோதும், நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று அநுரவின் ஆட்சி அமைந்தால், அதுவும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைக்காத ஆட்சி அமைந்தால், தேசிய மக்கள் சக்தியினர் தமிழ்க் கட்சிகளையும் தம்மோடு இணைத்துக்கொள்ளக்கூடும், அதனடிப்படையில் அநுரவுக்கு நெருக்கமானவரான சுமந்திரனுக்கும் அமைச்சுப் பதவி கிடைக்கக்கூடும் என்கிற எதிர்பார்ப்புக்கள், உரையாடல்கள் இருக்கின்றன. அதனடிப்படையிலேயே சுமந்திரனிடம் அமைச்சுப் பதவி குறித்த கேள்வி எழுப்பட்டிருக்கிறது. அவரும் அதைப் பரிசீலிக்கலாம், அதுவும் கட்சி கொள்கை ரீதியில் ஏற்றுக்கொண்டால் பரிசீலிக்கலாம் என்று கூறியிருக்கிறார்.

ஆனால், தேர்தல் களத்தில் அது அவர் நினைத்த போக்கில் மக்களைச் சென்று சேரும் என்று கருத முடியாது. அமைச்சுப் பதவிகளைப்பெறதமிழ்அரசுக்கட்சிஏற்கனவேபேரம்பேசிவிட்டது, தேசிய மக்கள் சக்தி கொண்டுவரவுள்ள புதிய ஒற்றையாட்சி அரசமைப்புக்கு அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக்கொண்டு தமிழ் அரசுக் கட்சி இணங்கிவிட்டது, பின் கதவால் அநுரவுக்கும் சுமந்திரனனுக்கும் பேரம் படிந்துவிட்டது என்றெல்லாம் தேர்தல் களம் இனிக் கதறினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

ஏற்கனவே தம்மைத் தவிர வேறு எந்தத் தமிழ் தரப்பை நாடாளுமன்றத்திற்கு அனுப்பினாலும் ஒற்றையாட்சியின் அடிப்படையில் அமைந்த புதிய அரசமைப்பை அவை ஏற்றுக்கொண்டு, இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து இனிமேல் பேசுவதற்கான வாய்ப்புக்களையே இல்லாமல் செய்துவிடுவார்கள் என்று வெறுவாய் மெல்லும் தமிழ்த் தேசிய முன்னணியினருக்கு இது அவல் கிடைத்த மாதிரி இருக்கப்போகின்றது.

மொத்தத்தில் அவலை நினைத்துக்கொண்டு வெறும் உரலை இடிப்பது போன்றுதான் இனிவரும் தேர்தல் களம் அமையும் போலுள்ளது.

# வடக்கு கிழக்கில் சிங்களவர்களை குடியேற்ற ஆலோசனை தந்த இஸ்ரேல்

**உபுல் யோசப் பெர்னான்டோ**

ஜே.ஆர்.ஜெயவர்தனவின் ஆட்சியின்போது, அவரது மகன் ரவி ஜயவர்தன இஸ்ரேலுக்கு சென்று, அந்தநாட்டுப் பிரதமரைச் சந்தித்து, வடக்கில் போரை எதிர்கொள்ள ஆயுதம் மற்றும் பயிற்சி கோரினார். புதிதாக நிறுவப்பட்ட சிறப்பு அதிரடிப் படைக்கு (றீவீய்) தேவையான பயிற்சியைப் பெறவேண்டும் என்பதே ரவியின் முக்கிய நோக்கமாக இருந்தது.

இஸ்ரேலில் பயிற்றுவிக்கப்பட்ட அதிரடிப் படை வடக்கு மோதலில் ஈடுபட்டிருந்த காலத்திலேயே, இந்திய-இலங்கை ஒப்பந்தம் கையெழுத்தானது, அந்த ஒப்பந்தத்தைத் தொடர்ந்து இந்திய அமைதி காக்கும் படை வடக்கில் நிலைநிறுத்தப்பட்டது. இதற்கிடையில், இந்திய-இலங்கை ஒப்பந்தத்திற்கு எதிராக ஜே.வி.பி. (ஜனதா விமுக்தி பெரமுன) கிளர்ச்சி செய்தது, வடக்கில் இந்தியப் படையினர் நிலைகொண்டிருந்ததை வாய்ப்பாகப் பயன்படுத்தி அதிரடிப்படை உட்பட படையினர் அடக்குமுறைக்காக கொழும்புக்கு கொண்டு வரப்பட்டனர்.

ஜே.வி.பி எழுச்சியை அடக்குவதில் அதிரடிப்படை முக்கிய பங்கு வகித்தது, அந்தக் காலத்தில் ஜே.வி.பி. கிளர்ச்சியாளர்கள் அதிரடிப்படைக்குப் பயந்தனர். இஸ்ரேலில்பயிற்றுவிக்கப்பட்ட அதிரடிப்படை ஜே.வி.பியை இரக்கமின்றி ஒடுக்கியது. தென்னிலங்கையில் ஜே.வி.பி கிளர்ச்சிக்கு எதிராக அதிரடிப்படை அனுப்பப்படுவதை ரவி ஜயவர்தன எதிர்த்த போதிலும், அவது தந்தையான ஜே.ஆர். அதனை ஆரம்பித்து வைத்தார், பின்னர் ஜனாதிபதி பிரேமதாச இந்த அணுகுமுறையைத் தொடர்ந்தார்:-

1994ஆம் ஆண்டு சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதியாக பதவியேற்றபோது, ஜே.வி.பி.யை அடக்கிய காலத்தில் அதிரடிப்படை செய்த மனித உரிமை மீறல்களை விசாரணை செய்வதற்கு ஜனாதிபதி ஆணைக்குழு உருவாக்கப்பட்டது. ஜே.வி.பி.க்கு அதிருப்தியை ஏற்படுத்திய அதிரடிப் படைக்குப் பயிற்சி அளித்த இஸ்ரேல், ஜே.வி.பி ஆட்சிக்கு வந்த பின்னர் எதிர்கொள்ள வேண்டிய முதல் சவாலாக மாறியுள்ளது. இஸ்ரேலிய சுற்றுலாவிகள் மீது தாக்குதல் நடத்தப்படப் போகின்றது என்கிற குற்றச்சாட்டின் மூலம் இந்தச் சவால் தோற்றம் பெற்றுள்ளது.

டி.எஸ்.சேனநாயக்கவின் காலத்தில் இஸ்ரேலுடனான இலங்கையின் உறவுப் பரிமாற்றம் தொடங்கிது. சாலமன் அரசர் வணிகக் கப்பல்களை காலிக்கு அனுப்பியதாக பைபிள் குறிப்பிடப்பட்டாலும், பிரித்தானிய காலனித்துவ ஆட்சியின்போது, பிரதம நீதியரசர் உட்பட இலங்கையை ஆண்ட பிரித்தானிய ஆளும்தரப்பைப் பிரதிநிதித்துவப்படுத்தியவர்களாக யூதர்கள் இருந்தனர். சேனநாயக்க இஸ்ரேலிடமிருந்து போர்க் கப்பல்களை வாங்குவதன் மூலம் அதனுடான உறவுகளைப் பேணி, பிரிட்டிஷ் காலனித்துவ நிர்வாகத்தின் கீழ் நிறுவப்பட்ட தொடர்புகளைத் தக்க வைத்துக் கொண்டார்.

பண்டாரநாயக்க குடும்பம் பாலஸ்தீனத்திற்கு ஆதரவாக இஸ்ரேலை எதிர்த்து வந்தது. ஆனால், 1977இல் ஜே.ஆர். ஆட்சிக்கு வந்ததும், அவர் தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டத்தை ஒடுக்க இஸ்ரேலின் ஆதரவைக் கோரினார். அந்த தொடர்பாடல்களுக்காக இஸ்ரேலிய தூதரகத்தை இலங்கையில் நிறுவ அனுமதித்தார். ஜெயவர்த்தன குடும்பம் இஸ்ரேலுடன் நெருங்கிய உறவைப் பேணி வந்தது. ஜே.ஆரின் பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி, இஸ்ரேலிய பல்கலைக்கழகத்தில் கல்வி கற்று விரிவுரையாற்றியதோடு, ஜே.ஆர், காமினி திஸாநாயக்கவை இஸ்ரேலியப் பிரதிநிதிகளுக்கு மகாவலி திட்டத்திற்கான தொழில்நுட்ப அறிவைப் பெறுவதற்காக அறிமுகப்படுத்தினார்.

வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசங்களில் சிங்கள மக்களைக் குடியேற்றுமாறு காமினிக்கு இஸ்ரேல் ஆலோசனை வழங்கியது. 1988ஆம் ஆண்டு, முன்னாள் மொசாட் அதிகாரியினால் எழுதப்பட்ட ”ஏமாற்று வழி” என்ற புத்தகத்தில் உள்ள தகவல்களை ஆராய்வதற்காக ஜனாதிபதி பிரேமதாச ஜனாதிபதி ஆணைக்குழுவை நியமித்தார். இந்த ஆணைக்குழுவின் அறிக்கையின் அடிப்படையில், லலித் மற்றும் காமினியால் தமக்கு எதிரான பதவிநீக்கப் பிரேரணை மொசாட் சதியின் ஒரு பகுதி என்று பிரேமதாசா தெரிவித்ததோடு, இஸ்ரேலிய தூதரகமாக இயங்கிய இஸ்ரேலிய நலன் காக்கும் பிரிவு இலங்கையிலிருந்து வெளியேற்றப்பட்டது.

இந்திய அமைதிப் படை திரும்ப அனுப்பப்பட்ட உடனேயே, நான் இஸ்ரேலிய நலன் பேணும் பிரிவை இலங்கையிலிருந்து அகற்றினேன் என்பது உங்களுக்குத் தெரியும். அதனால் மொசாட் எனக்கு எதிராக எழும்பியதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. இஸ்ரேலியப் பல்கலைக் கழகங்களுக்குச் சென்று அங்கு விரிவுரைகள் நடத்தி முறைகேடாகச்சம்பாதித்ததுரோகிகளும் நம்மிடையே இருக்கிறார்கள் என்பதை நினைவில் கொள்ளவும். அதை ஒரு கண-மும் மறந்துவிடக்கூடாது‘ என்று பிரேமதாச தனது உரையில் தெரிவித்திருந்தார்.

தொடக்கத்தில் இருந்தே இஸ்ரேலை எதிர்த்த சந்திரிகா, 1994இல் ஆட்சிக்கு வந்ததும் இஸ்ரேலுடன் இராஜதந்திர உறவுகளை மீண்டும் ஏற்படுத்தினார். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச, இலங்கை ஷ்- -பாலஸ்தீன நட்புறவு சங்கத்தின் தலைவராக, போருக்கு இஸ்ரேலின் ஆதரவைப் பெற்றார். 2022இல் ஜனாதிபதியாகப் பதவியேற்ற ரணில் இஸ்ரேலுடனான உறவைப் பலப்படுத்தினார். ஜே.வி.பி ஆரம்பத்திலிருந்தே இஸ்ரேலுக்கு எதிரான நிலைப்பாட்டையே கொண்டிருந்தது, ஆனால் இப்போது இஸ்ரேல் இலங்கையர்களுக்கு அதிக எண்ணிக்கையிலான வெளிநாட்டு வேலைகளை வழங்குவதால் இஸ்ரேலின் தேவையை ஜே.வி.பி. உணர்கின்றது. இதனால், ஜே.வி.பி.யால் தற்போது இஸ்ரேலை அந்நியப்படுத்த முடியாது.

# விலையுயர்ந்த மாணிக்கக் கற்களுடன் ஒருவர் அரலகங்விலயில் கைதானார்

அரலகங்வில பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நிகவதலந்த பிரதேசத்தில் விலையுயர்ந்த 05 மாணிக்கக் கற்களுடன் சந்தேக நபர் ஒருவர் புதன்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார் என அரலகங்வில பொலிஸார் தெரிவித்தனர்.

அரலகங்வில பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் தெஹியத்தகண்டிய பிரதேசத்தை சேர்ந்த 50 வயதுடையவர் ஆவார்.

குழி தோண்டும் போது இந்த மாணிக்கக் கற்கள் கிடைத்துள்ளன என சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதுதொடர்பானமேலதிகவிசாரணைகளை அரலகங்வில பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(05)

# அதீத போதையினால் யாழ். இளைஞன் சாவு

அதீத போதை காரணமாக யாழ்ப்பாணத்தில் இளைஞர் ஒருவர் கடந்த 29 ஆம் திகதி உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவர், உரும்பிராய் தெற்கை சேர்ந்த 21 வயதான இளைஞர் ஒருவர் ஆவார்.

இளைஞனின்தாய்ஏற்கனவேஉயிரிழந்த நிலையில், தந்தையும் சகோதரியும் வெளிநாட்டில் வசித்து வருகின்றனர். இந்நிலையில் இளைஞன் பாட்டியுடன் உரும்பிராயில் வசித்து வருகின்றார்.

அதீத போதையில் வீட்டுக்கு வந்த இளைஞன் நாலைந்து தடவைகள் வாந்தி எடுத்து விட்டு நித்திரைக்குச் சென்றுள்ளார்.


பாட்டியாரும்போதையில்தான்இளைஞன் படுத்துள்ளான்எனநினைத்துள்ளார்.ஆனாலும் நீண்டநேரமாகியும்இளைஞன்எழும்பாததால் ,இளைஞனைவைத்தியசாலைக்குகொண்டு சென்றவேளை இளைஞன் உயிரிழந்து சில மணி நேரம் ஆகிவிட்டதாக வைத்தியர்கள் அறிக்கையிட்டுள்ளனர்.(05)

### சந்திரிக்காவின் கணவர்

# விஜேகுரணதுங்க கொலையில் ஜே.வி.பிக்குத் தொடர்புள்ளது

### ரணில் பகிரங்க குற்றச்சாட்டு

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின்கணவரின்படுகொலையுடன் ஜேவிபிக்கு தொடர்புள்ளது என முன்னாள் ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.



முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிகா குமாரதுங்க, மஹிந்தராஜபக்சஆகியோருக்கு வழங்கப்பட்ட தனிச்சலுகைகளை விலக்கிக்கொள்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளமை குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் கணவர் விஜயகுமாரதுங்க கொலையில் ஜேவிபிக்கு தொடர்புள்ளது. சந்திரிகாகுமாரதுங்கவின் ஒரு கண் குண்டுவெடிப்பால் பாதிக்கப்பட்டுள்ளது.

அவர் ஒருபோதும் எனக்கு ஆதரவளிக்கவில்லை, மைத்திரிபால சிறிசேனவிற்கு ஆதரவளிப்பதற்காக நாங்கள் இருவரும் இணைந்து செயற்பட்டோம்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது ஆதரவை இழந்துள்ளமை வேறு விடயம். ஆனால்; அவரது பாதுகாப்பை குறைக்கமுடியாது. அவர்யுத்தத்தைமுடிவிற்கு கொண்டுவந்தவர் என்கின்றபோது அவரது பாதுகாப்புகுறித்துகவனம்செலுத்தவேண்டும்.

எனக்கு வழங்கப்பட்ட சலுகை களை விலக்கிக்கொள்ளுங்கள் ஏனையவர்களிற் கானவற்றை வழங்குங்கள். - என்றார்.(05)

# இரண்டரை கோடி ரூபா பெறுமதியிலான திமிங்கில வாந்தியுடன் இளைஞன் கைது



இரண்டரை கோடி ரூபா பெறுமதியான திமிங்கில வாந்தியுடன் (அம்பர்) இளைஞன் ஒருவன் கைது செய்யப்பட்டுள்ளதாக களுத்துறை பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

களுத்துறை பொலிஸ் குற்றத் தடுப்பு பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் வெலிபென்ன பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர் கைது செய்யப் பட்டுள்ளார்.

களுத்துறை வெலிபென்ன பிரதேசத்தில் வசிக்கும் 25 வயதுடைய இளைஞனே கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடமிருந்து 02 கிலோ 300 கிராம் திமிங்கில வாந்தி (அம்பர்) கைப்பற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை களுத்துறை பொலிஸ் குற்றத் தடுப்பு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# திமிங்கிலவாந்தியுடன் ஐவர் எல்பிட்டியவில் கைதாகினர்



*காலி,எல்பிட்டிய பிரதேசத்தில் திமிங்கில வாந்தியுடன் (அம்பர்) ஐந்து சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.*

*வலான மத்திய ஊழல் தடுப்பு பிரிவினருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில்சந்தேக நபர்கள் காலி, எல்பிட்டிய பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.*

*சந்தேக நபரிடமிருந்து 17 கிலோ 234 கிராம் திமிங்கில வாந்தி (அம்பர்) கைப்பற்றப்பட்டுள்ளது.*

*சந்தேக நபர்கள் ஐவரும் இந்த திமிங்கில வாந்தியை 50 மில்லியன் ரூபாவுக்கு விற்பனை செய்ய தயாராக இருந்துள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.*

*இதனையடுத்து, கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள்ஐவரும் மேலதிக விசாரணை களுக்காக பிட்டிகல பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.*

*(05)*



# தமிழ் அரசியல்வாதிகள் ஒன்றியணையவில்லை

## வடக்கு, கிழக்கு வலிந்துகாணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கம் வேதனை

தமிழ்அரசியல்வாதிகள்ஒன்றிணையாமல்ஆசனங்களை பெறுவதை மாத்திரம் நோக்கமாக கொண்டுசெயற்படுவதாக வடக்கு கிழக்கு வலிந்துகாணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

குறித்த சங்கத்தினரால் வவுனியா பழைய பஸ் நிலையப்பகுதியில் செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

அதன்பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்கள் -

இம்முறை தேர்தலில் வடக்கு கிழக்கு மாகாணத்தில் உள்ள தமிழ் வேட்பாளர்கள் பேரம்பேசக்கூடிய ஒருசக்தியாக மக்களின் நன்மைகருதி ஒன்றிணையவில்லை.

ஆசனங்களை பெறுவதை மாத்திரம் நோக்கமாக கொண்டு ஏட்டிக்கு போட்டியாக தனித்தனியாக தேர்தலில்





நிற்கின்றனர். இப்படி நின்று யாருக்காக நீங்கள் கதைக்கப்போகின்றீர்கள்.

நீங்கள் ஓர் அணியாக எப்போதாவது திரண்டிருக்கிறீர்களா? உங்களுக்குள்ளேயே போட்டியிட்டு குழப்பங்களை ஏற்படுத்தி கட்சிகளை பிளவுபடுத்தி தமிழ்த்தேசியத்தையே இன்று இல்லாது செய்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட தமிழ்மக்களை ஒன்றிணைத்து கலந்துரையாடி ஒற்றுமையாக எப்போது பயணித்துள்ளீர்கள்.

இந்தத் தேர்தலில் அதிகரித்துள்ள சின்னங்களால் தமிழ் மக்கள் குழப்பநிலையை அடைந்துள்ளனர். சங்கு, வீடு, சுயேச்சை, சைக்கிள் என்று பலகட்சிகள். பல சுயேச்சைகுழுக்கள் போட்டியிடுகின்றன.

இதனால் அரசியலை பற்றியே தெரியாதவர்கள் எல்லாம் நாடாளுமன்றம் செல்லக்கூடிய நிலமையே இன்று ஏற்பட்டுள்ளது.

வடக்கில் 12 ஆசனங்களை பெறுவதற்காக 800 இற்கும் மேற்பட்டவர்கள் களம் இறங்கியுள்ளனர். இவர்களுக்கு யார் வாக்களிப்பது. நண்பர்கள் உறவினர்கள் வாக்களித்தால் அந்த வாக்குகள் சிதறடிக்கப்படும் நிலையே காணப்படுகின்றது.

இதன் மூலம் சிங்கள கட்சிகள் ஆசனங்களை கைப்பற்றும் நிலைமையை நீங்களே உருவாக்கப்பார்க்கின்றீர்கள். பணத்தை ஏன் இவ்வாறு வீணடிக்கிறீர்கள் அதனை மக்களுக்கு வழங்குங்கள். நீங்கள் மாற்றத்தை உருவாக்குவோம் என்று கூறிவிட்டு இன்னும் கீழ் நிலைக்கே மக்களை தள்ளப்போகின்றீர்கள். - என்று தெரிவித்தனர்.(05)




# ஹெரோயின் போதை மாத்திரைகளுடன் யாழ்ப்பாணத்தில் இருவர் கைதாகினர்



யாழ்ப்பாணம் - அரியாலை பகுதியில் ஹெரோயின் மற்றும் போதை மாத்திரைகளுடன் இரண்டு சந்தேகநபர்கள் புதன்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் லூஸன் சூரிய பண்டார அவர்களின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

அரியாலைப் பகுதியைச் சேர்ந்த, 26 மற்றும் 32 வயதுடைய இரண்டு சந்தேக நபர்கள் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் ஒருவர் 10 போதை மாத்திரைகளுடனும், மற்றையவர் 120 மில்லிக்கிராம் ஹெரோயினுடனும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலதிக விசாரணைகளை யாழ்ப்பாணம் பொலிஸார் மேற்கொண்டு வருவதுடன், அவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(05)

காலைக்கதிர் Kalaikkathir

# மக்களால் பலமுறை நிராகரிக்கப்பட்ட ரணில் எனக்கு அரசமைப்பு கற்பிக்கப்போகின்றாரா?

## ஹரிணி காட்டத்துடன் கேள்வி



பொதுமக்களால் பலமுறை நிராகரிக்கப்பட்ட தனது தொகுதியில் பலமுறை தோல்வியடைந்த முன்னாள் ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்க எனக்கு அரசமைப்பு குறித்து கற்பிக்கவேண்டுமா என பிரதமர் ஹரிணி அமரசூரிய கேள்வி எழுப்பியுள்ளார்.

தேர்தலில் 17 முறை தோல்வியடைந்த போதிலும் ரணில்விக்கிரமசிங்க அரசியலில் இருந்து விடைபெறுகின்றார் இல்லை தொடர்ந்தும் தனது அரசியல்வாழ்க்கையில் தொங்கிக்கொண்டிருக்கின்றார் என பிரதமர் தெரிவித்துள்ளார்.

மக்கள் மாறிவிட்டார்கள் என்பதை தன்னை நிராகரித்துவிட்டார்கள் என அவரால் புரிந்துகொள்ள முடியவில்லை நாங்கள் புதிய பயணத்தை ஆரம்பித்துள்ளோம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொதுமக்களின் ஆணையே அரசமைப்பின் அடிப்படை. இதனை புரிந்துகொள்ளாத ஒருவர் எனக்கு எப்படி அரசமைப்பு குறித்து கற்பிக்க முடியும்? அரசமைப்பை நன்கறிந்த ஒருவர் தேர்தல்களை ஒத்திவைக்கமாட்டார், தேசிய பேரவை நீதித்துறையின் தீர்மானங்களில் தலையிடமாட்டார், எனக்கு அரசமைப்பினை கற்பிப்பது என்றால் ரணில்விக்கிரமசிங்கவிற்கு இந்த அடிப்படைகள் தெரிந்திருக்கவேண்டும் என ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

தங்களிற்குஅனைத்தும்தெரியும்ஏனையவர்களிற்கு எதுவும் தெரியாது என நினைத்து செயற்பட்ட தலைவர்களாலேயே இலங்கை அழிந்துபோனது. அவ்வாறான அரசியல் கலாசாரத்தை முடிவிற்கு கொண்டுவருவதற்குஅனுரகுமாரதிசநாயக்கஅரசாங்கம் முயல்கின்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.(05)

# ஆயுர்வேத மசாஜ் நிலையம் என்ற போர்வையில் விபசார விடுதி

## இருவர் கைது

கல்கிஸ்ஸைபொலிஸ்பிரிவுக்குட்பட்ட காலிவீதியில் ஆயுர்வேத மசாஜ் நிலையம் என்ற போர்வையில் இயங்கி வந்த விபச்சார விடுதி ஒன்றிலிருந்து இரண்டு பெண்கள் புதன்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார் என கல்கிசை பொலிஸார் தெரிவித்தனர்.

கல்கிசை பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காலிமற்றும்நாவலப்பிட்டிய ஆகியபிரதேசங்களைச் சேர்ந்த 38 மற்றும் 34 வயதுடைய இரு பெண்களே கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் ஆயுர்வேத மசாஜ்நிலையத்தின் உரிமையாளரும்காணப்படுவதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கல்கிசை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# சிறைச்சாலை கைதிக்கு போதைப்பொருளை கொண்டு சென்ற பெண் ஒருவர் கைதானார்



அங்குனுகொலபெலஸ்ஸ சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதி ஒருவருக்கு மிகவும் சூட்சுமமான முறையில் போதைப்பொருளைக் கொண்டு சென்றதாக கூறப்படும் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனச் சிறைச்சாலை ஆணையாளர் காமினி பீ.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது -

சந்தேக நபரான பெண் கைதி ஒருவரை சந்திப்பதற்காக அங்குனுகொலபெலஸ்ஸ சிறைச்சாலைக்குச்சென்றுள்ளார்.

இதன்போது சிறைச்சாலை அதிகாரிகளால்மேற்கொள்ளப்பட்ட சோதனையில், சந்தேக நபர் அணிந்திருந்தஉடையில்மிகவும் சூட்சுமமானமுறையில்மறைத்து வைக்கப்பட்டிருந்த கையடக்கத் தொலைபேசிமற்றும்புகையிலை என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

இதனையடுத்து, கைது செய்யப்பட்ட பெண் மேலதிக விசாரணைகளுக்காக அங்குனுகொலபெலஸ்ஸ பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.(05)

# 50 லட்சம் ரூபாய் பெறுமதியான ஹெரோயினுடன் ஒருவர் கைது

50 லட்சம் ரூபா பெறுமதியான ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர்.

பொலிஸ்விசேடஅதிரடிப்படையினருக்குக்கிடைத்த தகவலின்பேரில்மேற்கொள்ளப்பட்டசுற்றிவளைப்பில் சந்தேக நபர் மருதானை, குணசேகர மாவத்தை பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டவர் மருதானை, குணசேகர மாவத்தை பகுதியில் வசிக்கும் நபர் ஆவார்.

சந்தேகநபரிடமிருந்து505கிராம்500மில்லிகிராம் ஹெரோயின்போதைப்பொருள்கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மேலும் தெரிவித்துள்ளனர்.(05)

# வீசா ஏதுமின்றி இலங்கையிலே தங்கிய பங்களாதேஷிகள் கைது

வீசா இன்றி சட்டவிரோதமாக நாட்டில் தங்கியிருந்த 06 பங்களாதேஷ் பிரஜைகள் செவ்வாய்க்கிழமை மாலை கைது செய்யப்பட்டுள்ளனர் என சீதுவை பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் சீதுவை அமன்தொலுவ பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

18, 23, 26, 39 மற்றும் 43 வயதுடைய ஆறு பங்களாதேஷ் பிரஜைகளே கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சீதுவை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# போதைப்பொருளுடன் ஏறாவூரில் மூவர் கைது

மட்டக்களப்பு, ஏறாவூர் பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட மீராகேணி பகுதியில் உள்ள வீடொன்றில் போதைப்பொருளுடன் பெண் உட்பட இருவர் சந்தேகத்தின் பேரில் திங்கட்கிழமை கைது செய்யப்பட்டுள்ளதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

ஏறாவூர்பொலிஸாருக்குக்கிடைத்ததகவலின்பேரில்மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் ஏறாவூர் பிரதேசத்தைச் சேர்ந்த 24, 33 மற்றும் 36 வயதுடையவர்கள் ஆவர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடமிருந்து 11 கிராம் 230 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருள், 10,500 ரூபா பணம் மற்றும் போதைப்பொருள் பொதி செய்வதற்கு பயன்படுத்தப்படும் உபகரணங்கள் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# குருணாகல் - நீர்கொழும்பு வீதியில் கோர விபத்து

## மூவர் காயம்

குருணாகல் - நீர்கொழும்பு வீதியில் திங்கட்கிழமை இரவு இடம்பெற்ற விபத்தில் மூன்று பேர் காயமடைந்துள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

வேகக்கட்டுப்பாட்டை இழந்த கார் ஒன்று வீதியை விட்டு விலகிப் பாதுகாப்பு வேலியில் மோதி அருகிலிருந்த கால்வாயில் வீழ்ந்ததில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

கட்டுநாயக்க விமான நிலையத்தை நோக்கிப் பயணித்த கார் ஒன்றே விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தின்போது காரில் பயணித்த மூவரும் காயமடைந்துள்ள நிலையில் பிரதேசவாசிகளின் உதவியுடன் தங்கொட்டுவ வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்தவர்களில் ஒருவரின் உடல் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.(05)



காலைக்கதிர் Kalaikkathir

## ஜனநாயகச் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பில் பொய்யான கருத்துக்களை வெளியிட்டமைக்காக ஹரிணி அமரசூரிய பிரதமர் பதவியில் இருந்து விலகவேண்டும் எனவும் பொய்களைக் கூறினால் பதவி விலகுவதுமரபுஎனவும்அவர்தெரிவித்துள்ளார்.

ஆளும்தரப்பு அமைச்சர்கள் எவ்வளவு கூச்சலிட்டாலும்அவர்களுக்குஅரசியலமைப்பு பற்றி தெரியாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## 2 அல்லது ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சம்பந்தமாகப் பல விதமான கேள்விகள் எங்களிடத்தே கேட்கப்படுகின்றன. குறிப்பாக நான் கலந்துகொண்ட பல கூட்டங்களில் மக்களின் எதிர்பார்ப்பும் அப்படியாகத்தான் இருந்தது.

முன்னையகாலத்தில்நாங்கள்அமைச்சுப் பதவிகளை எடுக்கக்கூடாது, ஒரு நிலையான தீர்வு வருகின்ற வரைக்கும் மத்திய அரசில் நாங்கள் பங்குபெறக்கூடாது என்கின்ற கருத்துக்கள் நிலவின. ஆனால், அது கட்சியினுடைய கொள்கை என்று சொல்லமுடியாது. ஏனென்றால் இலங்கைத் தமிழரசுக் கட்சியும் அமைச்சுப் பதவிகளை எடுத்த ஒரு காலகட்டமும் இருந்திருக்கிறது.

ஆகவே, அப்படியான ஒரு சூழ்நிலை வருகின்றபோது நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று அந்த நேரத்தில்தான் ஒரு தீர்மானம் எடுக்கவேண்டும். எனினும் என்னுடைய சொந்த நிலைப்பாடு செல்லையா குமாரசூரியரைப் போலவோ அல்லது லக்ஸ்மன் கதிர்காமரைப் போலவோ அல்லது டக்ளஸ் தேவானந்தாவைப் போலவோ தனி ஒரு அமைச்சராக அமைச்சரவையில் போய் சேருவதென்பது மக்களுக்கு நன்மை பயக்காது. அதனால் எங்களுக்குரிய அரசியல் தீர்வும் காண முடியாத நிலைமை ஏற்படும்.

முருகேசு திருச்செல்வம் கட்சி சார்பாக - கட்சியினுடைய தீர்மானமாக, மக்களும் அதனை ஏற்றுக்கொண்டதால் அமைச்சரவையில் சேர்ந்தார். ஆனால், அமைச்சராக இருந்தும் தீர்வை நடைமுறைப்படுத்த முடியவில்லை எனத் தெரிந்த உடனேயே கட்சியின் கட்டளைப்படி அரைவாசிக் காலத்திலேயே அமைச்சுப் பதவியை விட்டு அவர் விலகி வெளியே வந்தார். அது வித்தியாசமான ஒரு நிலமை.

எங்களுடைய மக்களையும் கட்சியையும் பிரபலப்படுத்தி இரண்டோ, மூன்று பேர் அமைச்சரவையில் சேர்ந்திருந்து செயற்பட்டு எங்களுக்கான தீர்வைப் பெறும் நிலை குறித்து நாங்கள் கண்கொண்டும் பார்க்க மாட்டோம், அப்படியான தெரிவு எங்களுக்குக் அடையவேகிடையாது என்ற நிலைப்பாட்டில் இருக்கக்கூடாது.

காலங்கள் மாறும். நிலைமைகள் மாறும். ஆகையினால் அதற்கான ஒரு சந்தர்ப்பம் இருந்தால் அதனையும் நாங்கள் பரிசீலித்துப் பார்க்கவேண்டும் என்பதுதான் என்னுடைய நிலைப்பாடு ஆகும் -என்றார்.

## திருடர்களைப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

கெஸ்பேவ நகரசபை கேட்போர் கூடத்தில் நடைபெற்ற கெஸ்பேவ தொகுதியின் தேசிய மக்கள் கட்சியின் பெண்கள் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரதமர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

திருடனைப் பிடிக்க ஏன் தாமதம் என்று திருடனே கேட்கிறான். இது அவர்கள் நடத்தும் நாடகம்போன்றது இல்லை. நாங்கள் நாட்டைக் கட்டியெழுப்ப முயற்சிக்கிறோம். திருடர்களைப் பிடிப்பது என்பது ஊடகங்களுக்கான ஒரு நிகழ்ச்சி அல்ல, அவர்களைப் போன்ற திருடர்களைப் பொய்யாகப் பிடித்து சிறைக்கும் மருத்துவமனைக்கும் அனுப்பிவிட்டு, தவறான கையெழுத்துப் போட்டு வெளியே அனுப்புவதற்காக நாங்கள் இதைச் செய்யவில்லை.

நாங்கள்சட்டத்தின்படிஇதைச்செய்கிறோம், குற்றவாளிகள்தண்டிக்கப்படவேண்டும்.எனவே அதைச் சரியாகத்தான் செய்யவேண்டும். அதனால் நாங்கள் அவசரப்படவில்லை. தோற்கடிக்கப்பட்ட கட்சிகளுக்கோ அல்லது தனி நபர்களுக்கோ பதில் அளிப்பது எங்கள் கடமை அல்ல, மக்களுடன் தான் எங்கள் ஒப்பந்தம், அவர்களுக்கே நாம் பதிலளிக்கவேண்டியவர்கள் - என்றார்.

## தனது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளார். அதற்கான முதல் அடியாக ஜேவிபி தனது கட்சி தொடர்பான அனைத்துத் தொழிற்சங்கங்களையும் கலைக்கும் என்றும் அவர் கூறுகிறார்.

நாடாளுமன்றத் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

எங்கள் நாடு மிகவும் விரும்பத்தகாத அனுபவங்களை சந்தித்துள்ளது. குழந்தை பள்ளிக்கு செல்கையில், ஒரு நாள் ஆசிரியர்கள் வேலைநிறுத்தம், மற்றொரு நாள் அதிபர் வேலைநிறுத்தம், மற்றொரு நாள் கல்விசாரா ஊழியர்கள் வேலைநிறுத்தம், உடல்நிலை சரியில்லாமல் மருத்துவமனைக்கு செல்கையில், ஒரு நாள் மருத்துவர்கள் வேலைநிறுத்தம், மற்றொரு நாள் செவிலியர்கள், மற்றொரு நாள் உதவியாளர்கள். ஒரு நாள் சாலை மறியல், அரச பேருந்துகள் வேலை நிறுத்தம், மறுநாள் சாலைமறியல், தனியார் பேருந்துகள் வேலை நிறுத்தம். இதுதான் இந்த நாட்டின் வரலாறு.

இன்று நான் சொல்வதை நினைவில் வையுங்கள். அந்த வேலை நிறுத்த வரலாறு எதிர்காலத்தில் இருக்காது. யாருக்கு எதிராக வேலை நிறுத்தம் செய்கிறீர்கள்? அரசுடன் ஏதாவது பிரச்சினை என்றால் பேசி தீர்த்துக்கொள்ளுங்கள்.

இன்னும் 10 முதல் 15 வருடங்களில் இன்று பிறக்கும் குழந்தைகளுக்கு வேலை நிறுத்தம் என்றால் என்ன என்று சொல்லிக் கொடுக்க வேண்டியிருக்கும். ஊரடங்குச் சட்டத்தைக்கற்றுக்கொடுக்கவேண்டியிருக்கும். இது எதுவுமே இல்லாத ஒரு நல்ல நாட்டை உருவாக்குவோம். நாம்பொய்சொல்லவில்லை. இது மாறுதலின் காலம் என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com






# சட்டவிரோதமாகப் பிடிக்கப்பட்ட 1,180 சங்குகளுடன் ஒருவர் கைது

புத்தளம், கற்பிட்டி - வன்னிமுந்தல் பிரதேசத்தில் சட்டவிரோதமாகப் பிடிக்கப்பட்ட 1,180 சங்குகளுடன் சந்தேக நபரொருவர் புதன்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார் என கற்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

கற்பிட்டி பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் கற்பிட்டி - வன்னிமுந்தல் பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் மேற்கொள்ளப்பட்ட சோதனைநடவடிக்கையின்போதே சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

புத்தளம், கற்பிட்டி பிரதேசத்தில் வசிக்கும் 52 வயதுடைய நபரொருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கற்பிட்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# கிளிநொச்சி மாவட்டத்தில் விற்பனை கண்காட்சி நிகழ்வு



கிளிநொச்சி மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர்ச.மோகனபவன் தலைமையில் நடைபெற்ற விற்பனைக்கண்காட்சி நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ். முரளிதரன் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு இந்த விற்பனைக் கண்காட்சியை திறந்து வைத்தார்.



மேலும், சிறப்பு விருந்தினர்களாகஇளைப்பாறிய திட்டமிடல் பணிப்பாளர் கி.ஸ்ரீபாஸ்கரன், விவசாயத் திணைக்களபிரதிப்பணிப்பாளர் சோதிவிஜயதாசன், மாவட்ட செயலக சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவின் உதவிப்பணிப்பாளர் ச.சசீபன், கண்டாவளைபிரதேசகால்நடை வைத்திய அதிகாரி ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட செயலக பதவி நிலை உத்தியோகத்தர்கள், துறை சார்ந்த திணைக்கள உத்தியோகத்தர்கள், சுயதொழில் முயற்சியாளர்கள், பொதுமக்கள் உட்பட பலரும் வருகை தந்து கண்காட்சியை பார்வையிட்டனர். (05)



காலைக்கதிர் Kalaikkathir

# தலைவரின் கூட்டமைப்பையே சிதைத்தவர்களால் தமிழ் மக்களின் நலன் பற்றிச் சிந்திக்க இயலுமா?

## அங்கஜனும் கேட்கிறார்

தலைவரின் கூட்டமைப்பையே சிதைத்தவர்களால் தமிழ் மக்களின் நலன் பற்றிச் சிந்திக்க இயலுமா? என ஜனநாயக தேசிய கூட்டணியின் முதன்மை வேட்பாளர் அங்கஜன் இராமநாதன் கேள்வி எழுப்பியுள்ளார்.

நாடாளுமன்ற தேர்தலுக்கான மக்கள் சந்திப்புகளில் ஈடுபட்டுள்ள அவர், இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்; -

எம் மக்கள் அரசியல் ரீதியாகவும் தலைநிமிர்ந்து தன்மானத்துடன் நிற்க வேண்டும் என்றால் தமிழர்கள் மத்தியில் காணப்படும் ஒற்றுமையே பலம் என அவர் அன்றே கணித்து தமிழ்க் கட்சிகளை ஒன்றிணைப்பதில் அதிக கவனம் செலுத்தினார்.

ஆனால் இன்று எம் தமிழ் தலைமைகள் எமக்காக உயிர் தியாகம் செய்தவர்களை மறந்து தமது சுயலாபத்திற்காக ஆளுக்கோர் பக்கம் நீயா? நானா? எனப் பிரிந்து நிற்கின்றனர்.

தமிழ் மக்களுக்காக தீர்வுகளை பெற்றுக் கொடுக்கும் என அனைவரும் நம்பி இருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்று பிளவடைய இடமின்றி உள்ள போதிலும் மேலும் பிளவடைவதற்கான வாய்ப்புக்கள் கண்ணூடாக தெரிகின்றன.

வீடாக இருந்த அந்த ஒற்றைச் சின்னம் இன்று சைக்கிள்,மான்,மாம்பழம் ,சங்கு என பிளவடைந்து மக்களுடைய எதிர்பார்ப்பிலும் மண் அள்ளிப் போட்டுள்ளது.

மக்களுக்காக ஒன்றுபட இயலாதவர்கள் எப்படி மக்களுக்கான தீர்வைப் பெற்றுக் கொடுப்பார்கள்? என மேலும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.(05)

# பனை அபிவிருத்திச் சபையின் புதிய தலைவர் பொறுப்பேற்பு




பனை அபிவிருத்தி சபையின் புதிய தலைவராக நியமிக்கப்பட்ட விநாயகமூர்த்தி சகாதேவன் புதன்கிழமை தனது கடமைகளை உத்தியோகபூர்வமாகபொறுப்பேற்றுக் கொண்டார்.

இந்நிகழ்வில் யாழ்ப்பாணம் பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சூரிய பண்டார, வவுனியா பல்கலைக்கழக வேந்தர் மோகனதாஸ், பனை அபிவிருத்தி சபையின் உத்தியோகத்தர்கள் மற்றும் தேசிய மக்கள் சக்தியின் யாழ் மாவட்ட அமைப்பாளர் சந்திரசேகரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

(05)

# கரை ஒதுங்கும் மீன்கள் கிழக்கில் சம்பவம்





கரை ஒதுங்கி கடங்கரையில் இறந்து கிடக்கின்றன. (05)

கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு மாவட்டத்தின் பல இடங்களில் ஒருவகை மீனினம் கடலிலிருந்து செவ்வாய்க்கிழமை மாலை வேளையிலிருந்து கரை ஒதுங்குகின்றன.

களுதாவளை, தேற்றாத்தீவு, செட்டிபாளையும், மாங்காடு, குருக்கள்மடம் உள்ளிட்ட பல இடங்களிலும் இவ்வாறு மீன்கள் கரை ஒதுகுவதை அப்பகுதி கடற்றொழிலாழர்கள் அவதானித்துள்ளனர்.

சிறியஅவளவிலானகறுப்புநிறமீனினமேஇவ்வாறு






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 01.11.2024இல் வெளியிடப்பெற்றது